**<u>சுருக்கம்</u>**

சுற்றுலா – மாநில அரசு திட்டம் 2011–2012 – மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், அம்மா மண்டபம் சாலையில் நடைபாதை மேற்கூரை அமைக்கும் பணிகள்– ரூ.100.00 இலட்சம் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>சுற்றுலா மற்றும் பண்பாட்டு(சு3)த் துறை</u>**

அரசாணை(நிலை) எண்.217 நாள்:26.11.2011

(திருவள்ளுவர் ஆண்டு 2042, கார்த்திகை–10)

**<u>படிக்க:</u>**

1) மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண் ஜி1/சுற்றுலா வளர்ச்சி/2011, நாள் 18.9.2011.
2) சுற்றுலாத் துறை ஆணையர், சென்னை அவர்களின் கடித எண் 6391/திமவ 2 /2011, நாள் 19.9.2011.

–––––

**<u>ஆணை:</u>**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2011–2012–ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தின்போது, 30.8.2011 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:

> ***“திருச்சிராப்பள்ளி காவிரியாற்றின் கரையில் அம்மா மண்டபத்தில் இருந்து ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோவில் வரை பக்தர்கள் வெயில் மற்றும் மழைக் காலங்களில் சிரமமின்றி கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்வதற்கு வசதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒரு கோடி ரூபாய் மதிப்பில் நிழற்குடை அமைக்கப்படும்”.***

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சுற்றுலா ஆணையரின் கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர், (ஸ்ரீரங்கம்) அம்மா மண்டபம் சாலையில் (கி.மீ.0/0–1/300) நடைபாதையில் மேற்கூரை அமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.100.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு அனுப்பி வைத்துள்ளார் என்றும், மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி திருச்சிராப்பள்ளி மாவட்டம் (ஸ்ரீரங்கம்) அம்மா மண்டபம் சாலையில் (கி.மீ.0/0–1/300) சாலை ஓரத்தில் நடைபாதைகள், மழை மற்றும் வெயில் காலங்களில் ஏற்படும் சிரமங்களை போக்கும் வகையில் பக்தர்களுக்கு நடைபாதையில் மேற்கூரை அமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு சுற்றுலாத் துறையின் பங்காக ரூ.100.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும், இத்தொகையை சுற்றுலா ஆணையர் அவர்கள் பெற்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் வழங்குவதற்கு உரிய அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா ஆணையரின் கருத்துருவினை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது:

அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், காவிரியாற்றின் கரையில், அம்மா மண்டபத்திலிருந்து ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோவில்வரை(கி.மீ 0/0–1/300) சாலை ஓரத்தில் நடைபாதைகள், மழை மற்றும் வெயில் காலங்களில் ஏற்படும் சிரமங்களைப் போக்கும் வகையில், பக்தர்களுக்கு நடைபாதையில் மேற்கூரை அமைக்கும் பணிகளை, ரூ.100.00 இலட்சம் (ரூபாய் நூறு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிருவாக அனுமதியும் மற்றும் நிதி ஒப்பளிப்பும் வழங்கப்படுகிறது.

ஆ) மேலே பத்தி 5 (அ)–ல் நிதி ஒப்பளிப்பு செய்யப்படும் தொகையினைப் பெற்று, பணிகளை மேற்கொள்ள ஏதுவாக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியருக்கு வழங்குவதற்கு சுற்றுலாத் துறை இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:

5452–சுற்றுலா குறித்த மூலதனச் செலவு–01–சுற்றுலா அடிப்படை வசதிகள்–101–சுற்றுலாத் தலங்கள் –பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – KV - சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் –16–பெரும்பணிகள். (து.தொ.கு 5452 01 101 KV 1604).

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.254/DS(KM)/கல்வி–II/2011, நாள்:04.11.2011 ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வி.கு. ஜெயக்கொடி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
சுற்றுலா இயக்குநர், சென்னை–2.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9.
(சுற்றுலா இயக்குநர் வழியாக)
மாநில கணக்குத் தலைவர், சென்னை –9/18.
**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாரின் தனிச்செயலர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர், நிதி/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி2)த் துறை, சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டு(சு1,சு2,பொது)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**